மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) கரூர் வட்டம் மேலப்பாளையம் கிராமத்தில் உள்ள 87 அரிசனங்களுக்கு வீட்டு வசதி அளிக்க மேலப்பாளையம் கிராமத்தில் சர்வே எண் 727-ல் 5.02 ஏக்கர் பரப்பளவுள்ள புன்செய் பட்டா நிலங்களை நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின் பிரிவு 4 (1) முன் மொழிவு அறிவிப்பு வரைவு சமூக நலத்துறையின் 18—1—72 நாளிட்ட 76-ம் எண் அரசு ஆணையில் ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழ் பாகம் 11, பிரிவு 1, பக்கம் 72, நாள் 2—2—72-ல் வெளியிடப்பட்டுள்ளது. பிரிவு 6 விளம்பரம் இன்னும் வரவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த வீட்டுமனைக்காகக் கையகப்படுத்துகிற பணி பல ஆண்டுகளாக தாமதமாக நடந்து வருகிறது. ஆகவே இதைத் துரிதப்படுத்த அரசு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நிலம் கொடுப்பவர்கள் விரைவில் ஒப்புதல் கொடுப்பார்களேயானல், தாமதமில்லாமல் செயல்படுத்திவிட முடியும். பெரும்பாலான இடங்களில் நிலம் கொடுப்பதில் எதிர்ப்பு கொடுக்கிறார்கள். சில நேரங்களில் அவர்கள் வழக்குமன்றம் செல்கிறார்கள். எனவே தாமதம் ஏற்படுகிறது. இதில், வழக்குமன்றம் செல்லவில்லை என்றாலும் பல எதிர்ப்புகள் இருந்ததால் முறைப்படி செய்யவேண்டியிருந்தது. அதனால் தாமதம். அதைத் தவிர்க்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Supply of essential commodities

* 581 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Revenue be plrased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to constitute any cell for the supply of essential commodities to consumers; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) "தமிழ்நாடு உணவு வழங்கல் கழகம்" (Tamil Nadu Civil Supplies Corporation Limited) என்ற பெயரில் அரசுக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த நிறுவனம் விலையை நிலைப்படுத்துவதற்காக, அவ்வப்போது

1972 மார்ச் 20]

நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருக்கக்கூடிய நெல், அரிசி மற்றும் பிற இன்றியமையாப் பொருள்களை வெளிச்சந்தையில் கொள் முதல்—விற்பனை செய்தல் உட்பட வாணிகம் செய்தலை மேற் கொள்ளும்.

திரு. என். டென்னிஸ்: கூட்டுறவு விற்பனைக் கடைகளிலும் தேவைக்கேற்ப அத்தியாவசியப் பொருள்கள் கிடைப்பதில்லையென்பு தால் இவைகளின் விலைகள் உயர்ந்துகொண்டே செல்கிறது. ஆகவே விலைவாசியைக் குறைப்பதற்காக இவைகளை விற்பனை செய்வதில் அரசாங்கமே நேரடி வினியோக முறையை வகித்து செயல்படுத்துமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விலைவாசியைக் குறைப்ப தற்கும் கட்டுப்படுத்துவதற்கும் வெளிச் சந்தையில் இருப்பதை வாங்கி லாபம் நஷ்டம் இல்லாத வகையில் மக்களுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்திருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, will the Government think of issuing family cards to the families who earn less than Rs. 500 per month so that all the essential commodities for a month could be supplied to them?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழ்நாட்டில் இருக்கிற மக்கள் அனைவருக்கும் குடும்பக் கார்ட் வழங்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விற்பனை கோடவுன்ஸ் பற்றிச் சொன்னார்கள். அதேபோல் அறுவடை காலங்களில் விவசாயிகளுக்கு உதவி செய்யும் பொருட்டு அறுவடைப் பொருள்களை அரசாங்கமே கொள்முதல் செய்வது அல்லது கடனாக 50 சத வீதம் அல்லது 75 சத வீதம் ஆஃப் தி டோட்டல் காஸ்ட் கடனாக குறைந்த வட்டியில் கொடுத்து கோடவுன்ஸில் வைத்து பிறகு அவர்களுக்கு வேண்டும்போது டிஸ்ட்ரிப்யூட் செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அறுவடைக் காலங்களில் பொது மக்களுக்கு என்ன தேவை என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று புரியவில்லை. அறுவடை காலங்களில் கிடைக்கக்கூடிய பொருள்களை அரசாங்கமே விலைக்கு வாங்கி வைத்து லீன் பீரியேட்களில், அறுவடை இல்லாத காலங்களில் விநியோகிக்க அரசு நடவடிக்கைகள் எடுக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இப்போது அரிசியை அரசாங்கம் விநியோகம் செய்வதுபோல் சாதாரணமாக மற்ற உணவுப் பண்டங்களையும் அவைகளின் விலைகள் திடீர் திடீரென்று ஏறிப் போகின்ற காரணத்தினால், வாங்கி அவற்றின் விலைகளைக் கண்டிரோல் செய்து அரசாங்கமே அவற்றையும் விநியோகம் செய்வதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : விலைவாசி ஏறுகிறது, விலைவாசி ஏறுகிறது என்று சொல்வது வாடிக்கையாகிவிட்டது. விலைவாசிகள் இப்போது குறைந்துக் கொண்டிருக்கிற நிலையில் உறுப்பினர்கள் இப்படிச் சொல்லக்கூடாது. விலைகள் ஏறாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்கும். வணிகக் கழகம் மூலம் பொருள்களை வாங்கி வைத்து விற்க வசதியாக இருக்கும்.

* 582 வினா—திரு. சி. மணலி கந்தசாமி : மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உணவு தானிய வர்த்தகத்தை அரசு மேற்கொண்டு கூட்டுறவு அமைப்புகளின் மூலம் விநியோகிக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அத்தகைய செயற் குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்ய விருப்பமாயிருந்து, அவை திறம்படச் செயலாற்றுமானால், இயங்கக் கூடிய நேர்வுகளில், அரசு மேற்கொள்கின்ற அளவுக்குக் கொள்முதல், பங்கீட்டுப் பணிகளைச் செய்ய கூட்டுறவுச் சங்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

திரு. ஆ. கு. சுப்பையா : கிராமங்களில் விவசாயிகள் உற்பத்தி செய்யக் கூடிய உணவுப்பொருள்களுக்கு நியாயவிலை நிர்ணயம் செய்து சிவில் சப்ளைஸ் இலாகா மூலமாகவாவது விநியோகம் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசாங்கம் நெல் போன்ற பொருள்களுக்கு குறைந்தபட்ச விலையை நிர்ணயித்திருக்கிறது. வெளிச் சந்தையில் வாங்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இதனால் விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். அதே நேரத்தில் வாங்கிய பொருள்களை மீண்டும் வழங்குவதற்கு இந்தக் கார்ப்பரேஷன் மூலம் திரும்ப வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.